30th January 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.
(b) Does not arise.

Beedi Workers.

*253 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத் தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் வருஷம் அக்டோபர் மாதம் 11-ந் தேதி கனம் அமைச்சர் அவர்களிடம் வடாற்காடு ஜில்லா பீடி தொழிலாளர் சங்கத்தின் சார்பில் பீடி தொழிற்சாலைகள் சட்டத்தின் லைசென்சு பிரிவை அமுல் நடத்துவதில் முதலாளிகள் மறுத்து வருவதையும் காலதாமதம் செய்வதைப் பற்றியும் கொடுத்த மனு மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

(இ) முதலாளிகள் தொழிலாளர்களின் பேரிலே லைசென்சு வாங்குவது சர்க்காருக்குத் தெரியுமா?

(உ) இது விஷயமாக சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக் கைகள் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) மனுவைப் பரி சீலனை செய்த லேபர் கமிஷனர், பீடி தொழிற்சாலைகள் சட்டத்தின் லைசென்சு பிரிவுகளை அமுல் நடத்துவதை மறுத்தோ அல்லது காலதாமதம் செய்தோ வரும் முதலாளிகளின்மீது தகுந்த நட வடிக்கை எடுக்கும்படி தன் கீழுள்ள அதிகாரிகளுக்கு உத்தரவு விடுத்திருக்கிறார்.

(இ) &(உ) இவ்விதமான புகார் சர்க்காருக்கு வரவில்லை.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், லைசன்ஸ் பிரிவை சரியான முறையில் நடத்தவில்லை என்பது மட்டுமல்ல. பழைய படியே பாக்டரிகள் இருந்தும்கூட அவர்கள் காண்டிராக்ட் அடிப் படையில், வேலை குறைவாக கொடுத்து வருவதோடு மட்டுமல்ல, அவர்களுக்கு புகையிலை, இலை முதலியவைகளையும் குறைவாக கொடுத்து கூலியை குறைத்து வருகிறார்கள் என்று தென்னாற் காடு பீடித் தொழிலாளர் சங்கத்திலிருந்து பல மகஜர்கள் வந்திருந்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. ஆகவே, நல்ல முறையில் இந்த லைசென்ஸ் பிரிவை அமுல் நடத்த சர்க்கார் உத்தரவு பிறப்பிக்குமா?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் இரண்டு பிரச்னைகள் இருக்கின்றன. லைசென்ஸ் பிரிவு சரியாக அமல் நடத்த வில்லை என்று சொன்னால், அதைப்பற்றி ராஜ்ய சர்க்கார் கீழ் அதிகாரிகளுக்கு நல்ல முறையில் அமல் நடத்தும்படி உத்தர விட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு முதலாளிகளால் கூலி குறைவாகக் கொடுக்கப்பட்டு வருகிறது என்று சொன்னால் அது தொழில் தகராறு சம்பந்தமானது. இதற்காக கன்ஸிலியேஷன் நடத்தவேண்டும். இம்மாதிரிப்பட்ட தொழில் தகராறு வந்தால் உடனடியாக சர்க்காரோ அல்லது மந்திரியோ நடவடிக்கை எடுத்துக்கொள்ளமுடியாது. லேபர் ஆபீஸர் இதற்கான நடவடிக் கைகளை எடுத்துக்கொள்வார்.

[30th January 1961

SRI V. K. KOTHANDARAMAN : *1944-வது வருஷத்திய மத்திய சர்க்கார் சட்டப்படி பீடி தயாரிப்பதற்காக (கொடுக்கக் கூடிய) புகையிலை லைசன்ஸ் எல். 2, எல். 5 என்ற லைசன்ஸ்கள் கொடுக்கப்படும். இதற்கு மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்காருடைய அனுமதியைக் கேட்டுத்தான் கொடுக்கிறார்கள். ஆகவே இது போன்ற லைசன்ஸ் கொடுக்கும்போது விதிகளை மீறக்கூடிய விவரங்களைப்பற்றி மத்திய சர்க்காருக்கு ராஜ்ய சர்க்கார் தெரியப்படுத்தியிருக்கிறார்களா? இல்லையென்றால் இனிமேலாவது இவ்விதம் தெரிவிக்க முன் வருவார்களா?*

THE HON. SRI R. VENKATARAMAN : *கனம் அங்கத்தினர் அவர்கள் தகவல்கள்தான் கொடுக்கிறார், கேள்வி கேட்கவில்லை. இம்மாதிரிப்பட்ட லைசன்ஸ்கள் கொடுப்பது மத்திய சர்க்காருடைய பொறுப்பிலுள்ளது. ராஜ்ய சர்க்காருக்கு இதில் எந்தவிதமான பொறுப்பும் கிடையாது.*

SRI K. ANBAZHAGAN : *தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கு கூலி கொடுப்பதிலே, அவர்களை ஏமாற்றக்கூடிய முறையில், லைசன்ஸ் பெறுவதற்காக கம்பெனிகளின் பெயரை மாற்றிச் சொல்லக்கூடிய பல தவறுகள் நடைபெற்று வருகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அப்படியாயின் அத்தவறுகளை நீக்குவதற்கு அரசாங்கம் என்ன வகையான நடவடிக்கை எடுத்திருக்கிறது?*

THE HON. SRI R. VENKATARAMAN : *என்ன தவறு ஏற்பட்டிருக்கிறது என்பதில் ஒன்றை எடுத்துச்சொன்னால் என்னால் பதில் சொல்லமுடியும். பொதுவாக தவறுகள் என்று சொன்னால் பதில் சொல்லுவது மிகவும் கஷ்டம்.*

SRI M. P. SARATHI : *அமைச்சர் அவர்கள் ஒரு தவறை காண்பிக்கும்படி சொன்னார்கள். நான் சொல்லுகிறேன், வேலூரில் ரூ. 1-11-0 கூலி கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருந்தும் ரூ. 1-4-0 கொடுத்து வேலை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்?*

THE HON. SRI R. VENKATARAMAN : *கனம் அங்கத்தினர் திரு. கோதண்டராமன் அவர்களுடைய கேள்விக்குப் பதில் சொல்லுகின்றபோது இதைப்பற்றி சொன்னேன். இது தொழில் தகராறு சம்பந்தமானது, இம்மாதிரி தொழில் தகராறு ஏற்பட்டவுடன் சட்டப்படி லேபர் கமிஷனரிடத்தில் புகார் செய்ய வேண்டும். அம்மாதிரி புகார் செய்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

Poultry

* 254 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the number of Poultry Farms to which the Government give grants and loans?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix IV on page 135 infra.